

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 46–வது கோடை விழா மலர்க்கண்காட்சியினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் நேற்று முன்தினம் (21.05.2023) திறந்து வைத்து, பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சீ.பாலச்சந்தர் உள்ளிட்ட தொடர்புடையஅலுவலர்கள் உள்ளனர்.

### பா.ஜ.க.வுக்கு எதிராக

# எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கை தீவிரம்!

## மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தியுடன் நிதிஷ்குமார் சந்திப்பு!

புதுடெல்லி, மே 23-

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி ஆகியோரை பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் சந்திக்கிறார்.

2024ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் ஈடுபட்டுள்ளார். இதற்காக அவர் நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்து வருகிறார். அந்த வகையில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரை, நிதிஷ்குமார் சந்தித்துப் பேசுகிறார்.

முன்னதாக கடந்த ஏப்ரல் 12ஆம் தேதி ராகுல், கார்கேவுடன் நிதிஷ்குமார் ஆலோசனை நடத்தினார். அதன் பின்னர் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, அகிலேஷ் யாதவ், ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக், சரத் பவார், உத்தவ் தாக்கரே, டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கேஜ்ரிவால், சீதாராம் யெச்சூரி, டி.ராஜா, ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் உள்ளிட்டோரை நிதீஷ்குமார் சந்தித்து பேசினார்.

இந்நிலையில், கார்கே, ராகுல்காந்தி ஆகியோரை, நிதிஷ்குமார் மீண்டும் சந்திக்கிறார். அடுத்து வரவுள்ள 5 மாநில தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து இந்த சந்திப்பின் போது ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன்’ நூல் பற்றி – பெரியார் திடலில்

# கவிஞர் தஞ்சை கூத்தரசன் தொடர் சொற்பொழிவு!

## மாம்பலம் ஆ.சந்திரசேகர் தொடக்க உரையாற்றுகிறார்!

சென்னை, மே 23-

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி. ஆ.வீரமர்த்தினி தன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகம் போற்றும் ஒப்பற்ற பகுத்தறிவு பேராசான் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறை பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், 25.5.2023 வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் சென்னை, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் என். (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அந்நிகழ்வில் தி.மு.க. தலைமை இலக்கிய அணிப்புரவலர் தஞ்சை. கூத்தரசன் தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய ‘உங்களில் ஒருவன்’ நூலைப் பற்றி ஏழாவது தொடர் சொற்பொழிவினை ஆற்றுகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் தொடக்க உரை நிகழ்த்துகிறார். பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஏ.வெங்கடேசன், தென் மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்தனம் ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சிக்கு அனைவரும் அணிதிரண்டு வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் 7 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை,மே.23-

7 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்தது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:

அண்மையில் முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் உட்பட மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டனர். பல்வேறு துறைகளுக்கான செயலாளர்கள்மாற்றப்பட்டனர். அதனைத் தொடர்ந்து கடந்த மே 16 ஆம் தேதி, 16 மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட 48 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ஒரே நாளில் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது.

மீண்டும் அதிக எண்ணிக்கையிலான ஐபிஎஸ் அதிகாரிகளை ஒரே நாளில் பணியிட மாற்றம் செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாகவும், பணியிட மாற்ற பட்டியல் தயாராகி வருவதாகவும், விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வெளியாகும் எனவும் நியூஸ்7 தமிழ் முன்னதாக தெரிவித்திருந்தது. இதனை அடுத்து, கடந்த மே 19 ஆம் தேதி, 27 ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 39 காவல்துறை அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது.

இந்நிலையில், இன்று 7 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மீண்டும் பணியிட மாற்றம் செய்து தலைமைச் செயலாளர் இறையன்பு உத்தரவிட்டுள்ளார். அதன்படி, தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்பரேஷனின் மேலாண் இயக்குனராக இருக்கும் கமல் கிஷோர் ஐ.ஏ.எஸ்., மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் முன்னதாக அவர் செங்கல்பட்டு ஆட்சியராக நியமிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் மேலாண் இயக்குனராக இருக்கும் சுப்பையன் ஐ.ஏ.எஸ்., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக ராகுல் நாத் ஐ.ஏ.எஸ். தொடருவார் என்றும், அவரை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக செந்தில்ராஜ் ஐ.ஏ.எஸ். தொடருவார் என்றும், அவர் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளராக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்ட ஆட்சியராக உள்ள வினீத் ஐ.ஏ.எஸ்., ஆவின் மேலாண் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம், அவர் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குனராக நியமிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

நிதித்துறை முதன்மை செயலாளராக உள்ள உதயசந்திரன் ஐ.ஏ.எஸ்.க்கு, தொல்லியல்துறை ஆணையராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளராக உள்ள ககன் தீப்சிங் பேடி ஐ.ஏ.எஸ்க்கு, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை முதன்மைச் செயலாளராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு - எம்.எஸ்.தரணிவேந்தன் அறிவிப்பு!





திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 29.05.2023 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில், தெற்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால் தலைமையில், சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத்தலைவர் அ.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் செய்யாறு காஞ்சிபுரம் சாலை, புளியரம்பாக்கம் கிராமத்தில் உள்ள எம்.டி.ஜெ திருமண மண்டபத்தில் நடைபெறும். இச்செயற்குழுக் கூட்டத்தில் மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

**எம்.எஸ்.தரணிவேந்தன்**
செயலாளர்
திருவண்ணாமலை வடக்கு
மாவட்ட தி.மு.க.

**அமைச்சர் எ.வ.வேலு**
செயலாளர்
திருவண்ணாமலை தெற்கு
மாவட்ட தி.மு.க.

### தமிழகத்தில் உள்ள பெட்ரோல் பங்குகளில்

# 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் வாங்கப்படும்!

## தமிழ்நாடு பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு!

சென்னை, மே 23-

புழக்கத்தில் இருந்த 2000 ரூபாய் நோட்டுகள் திரும்ப பெறப்படுவதாக கடந்த 19 ஆம் தேதி ரிசர்வ் வங்கி அறிவித்திருந்தது. இந்த நிலையில், 2000 ரூபாய் நோட்டுகள் மாற்றம் தொடர்பாக வங்கிகளுக்கு வழிகாட்டுதல் நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. இந்த நிலையில், இன்று முதல் ரூ.2000 ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் மாற்றி கொள்ளலாம் என்றும், 2023 செப்டம்பர் 30ஆம் தேதி வரை 2000 ரூபாய் நோட்டுகள் திரும்ப பெறப்படும் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. தினமும் 20,000 ரூபாய் மதிப்புள்ள 2000 ரூபாய் நோட்டுகளை வங்கியில் மாற்றிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், தமிழ்நாட்டில் உள்ள பெட்ரோல் பங்குகளில் 2000 ரூபாய் நோட்டுகள் வாடிக்கையாளர்களிடம் வாங்கப்படும். 2000 ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கி திரும்பப் பெறுவதாக அறிவித்த நிலையில் தமிழ்நாட்டில் உள்ள பெட்ரோல் பங்குகளில் 2000 ரூபாய் நோட்டுகள் பெறப்படும் என தமிழ்நாடு பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

அதேசமயம் பெட்ரோல் பங்குகளில் சில்லறை தட்டுப்பாடுகள் ஏற்படாமல் இருக்க வங்கிகள் தடையின்றி 2000 ரூபாய் நோட்டிற்கான தகுந்த சில்லறைகளை வழங்கி உதவிட வேண்டும் என தமிழ்நாடு பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### லயோலா கே.மதன் தலைமை! ஜெ.ஜெ. எபினேசர் - இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் சாதனை விளக்க பொதுக் கூட்டம்!

## ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. - தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மே 23 -

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில், இராயபுரம் கிழக்குப் பகுதி 49-வது வட்டத்தில் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (23.5.2023 - செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணிக்கு பாலு முதலி தெருவில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லயோலா கே.மதன் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் இரா. செந்தில்குமார், வ.பெ.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வே. சிவக்குமார், இர. பொன். இளவரசன், வை. கௌதமன், ஜெ.விகாஷ், நா.ம.தினேஷ்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

நலத்திட்ட உதவிகளை வழங்கி ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் தா. இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., எஸ்.ஜோயல், எம்.நவீன், இரா.மதிவாணன், பி.டி.பாண்டிச்செல்வம், ந.மனோகரன், இரா. கருணாநிதி, ஆர்.எம்.டி. ரவீந்திரன், ஆர். வெற்றிவீரன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, எல்.அருளரசன், நா.சண்முகம், இ. ராஜேந்திரன், க.கோவிந்தசாமி, டி.சுரேஷ், எம்.தீனதயாளன், ப.சோமசுந்தரமூர்த்தி, பா.வேளாங்கண்ணி, ரெயின்போ விஜயகுமார், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், ப.ஜெயலட்சுமி, லோ.மோகன், எம்.கே.இஸ்மாயில், கு. ரமேஷ், த.திருஞானம், வி. மலையம்மாள், இ.மதன், ந.பார்த்திபன், எஸ்.சுரேஷ்குமார், ஜெ.நிரஞ்சன், வி.விஜயலட்சுமி, எஸ்.கீதா, ஜி.சதீஷ்குமார், ஆர். வி.கணேஷ், என்.கிருஷ்ணன், பி. கண்ணன், கே. ஆறுமுகம், இரா. பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் முருகன், பாலலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன் உள்பட மாவட்டப் பிரதிநிதிகள், 49-வது வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் உள்பட கழக முன்னணியினர் கலந்துகொள்கின்றனர்.

49வது வட்டச் செயலாளர் எல்.சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

### ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

# 111வது வட்டச் செயலாளர் ஆர்.பாபுவின் தாயார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மே.23-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 111வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபுவின் தாயார் திருமதி. ஆர்.சிவகாமி என்கிற பாப்பாத்தி அம்மாள் (வயது 77) அவர்கள் நேற்று (22.5.2023) பிற்பகல் 12.40 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



இச்செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி பாப்பாத்தி அம்மாள் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (23.5.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு, ஆயிரம் விளக்கு, அஜிஸ் முல்க் இராண்டாவது தெருவில் உள்ள 41/2 என்ற எண் கொண்ட இல்லத்தில் இருந்து புறப்பட்டு காசிமேடு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியத்துக்குட்பட்ட ஒழையூர் மற்றும் சேந்தாங்குளம் ஊராட்சிகளில் இளைஞரணி சார்பில் நடைபெற்ற கழக அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் சாலவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் டி.குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் ஊராட்சி மன்ற தலைவர்கள் அமுதா தமிழ்வேந்தன், முனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞரணி கே.வெங்கட்ராமன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை கழக பேச்சாளர் மங்களம் பிரபாகரன் ஆகியோர் பேசினர். இதில் எஸ்.ஆர்.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஜி.சிவராமன், இளைஞரணி துணை அமைப்பாளர் பெ.மணி, கார்த்திகேயன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் கோபி.சேகர், மற்றும் என்.எஸ்.இரவி, வி.பாலமுருகன், வி.பாண்டியன், செ.விஷ்ணு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தஞ்சையில் மது அருந்திய இருவர் மரணம்

# விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டனரா? தீவிர விசாரணை!

## மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பேட்டி!

தஞ்சாவூர், மே 23-

தஞ்சாவூரில் மது அருந்திய இருவர் மரணம் அடைந்ததில், அவர்கள் அருந்திய மதுவில் சயனைடு விஷம் கலந்திருந்ததாக மாவட்ட ஆட்சியர் தகவல். தஞ்சாவூர் கீழவாசலில் அனுமதி பெற்ற டாஸ்மாக் பார் செயல்பட்டு வருகிறது.

இதில் மது அருந்திய மீன் வியாபாரியான குப்புசாமி (68), பூமான்ராவத்தன் கோயில் தெருவைச் சேர்ந்த கார் ஓட்டுநர் குட்டி விவேக் (36) ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் செய்தியாளர்களிடம் கூறியது.

“தஞ்சாவூரில் மது அருந்தி குப்புசாமி, விவேக் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். இருவரது உடல்களிலும் இருந்த சில பகுதிகள் எடுக்கப்பட்டு, தஞ்சாவூர் மண்டல தடய அறிவியல் ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டன. இந்த ஆய்வறிக்கையில் அவருகள் அருந்திய மதுவில் மெத்தனால் ஆல்கஹால் இல்லை என்பதும், சயனைடு விஷம் இருந்ததும் தெரியவந்தது.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக பார் உரிமையாளர், பார் ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளனர். பார் உரிமையாளர் செந்தில் பழனிவேல், பார் ஊழியர் காமராஜ் ஆகியோரை தஞ்சை நகர காவல்துறையினர் கைது செய்தனர்.

உயிரிழந்த விவேக் குடும்ப பிரச்னை காரணமாக அவர் மனைவியை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார். என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக விரிவான விசாரணை நடைபெற்று வருகிறது. இருவரும் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டனரா? அல்லது கொலை செய்யப்பட்டனரா? என்பது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வருகிறார். இந்த விசாரணையின் முடிவில் முழு விவரமும் தெரியவரும். மேலும் இருவரின் பிரேத பரிசோதனை முடிவு வந்தவுடன் மேலும் சில தகவல்கள் கிடைக்கலாம். இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது கண்டிப்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

அப்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் உடனிருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர். முகிலன்
### மே 23 (1999)



**1954இல் கழக உறுப்பினராகி பின்னர், கோமல் கிளைக் கழகச் செயலாளர் – மயிலாடுதுறை வட்டக் கழக துணைச் செயலாளர் – வட்டக் கழகப் பொறுப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மயிலாடுதுறை பகுதியில் கழகம் வளர உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1962இல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் – மிசா கைதியாக ஒரு மாத சிறைவாசம்; மேலும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**